# அறிமுகம்

"கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் அறையப்பட்டதையும்" என்பதுதான் புதிய ஏற்பாட்டு பிரசங்கத்தின் மையக் கருத்து! பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு இயேசுவை பிரசங்கித்து கூடிவந்திருந்த ஜனங்களிடம், "அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனைப்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள்" என்றார் (நடபடிகள் 2:23; காண்க வசனம் 36; 3:14, 15). பவுல் எங்கெல்லாம் பிரசங்கித்தாரோ - கொரிந்து பட்டணத்தில் (1 கொரிந்தியர் 1:23; 2:2), பிசிதியாவிலுள்ள அந்தியோகியாவில் (நடபடிகள் 13:14, 26-31), அத்தனேயில் (நடபடிகள் 17:30, 31) - "கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் அறையப்பட்டதையும்" பிரசங்கித்தார். கொரிந்து பட்டணத்து சபைக்கு அவர் எழுதினார்,

> சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது. அந்தப்படி: ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன் என்று எழுதியிருக்கிறது. ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்க சாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கவில்லையா? எப்படியெனில், தேவ ஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று. யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்; நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார். ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவ பெலனும் தேவஞானமுமாயிருக்கிறார். இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிகபலமாயிருக்கிறது. எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தில் இழிவானவைகளையும்

> *அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்குமுன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார். அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி, மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக, அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.*
>
> *சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப்பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்* (1 கொரிந்தியர் 1:18-2:2; வலியுறுத்தம் என்னுடையது).

*“கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் அறையப்பட்டதுமே” இன்றைக்கு நம்முடைய பிரசங்கத்தின் மையமாகவும் இருக்க வேண்டும்! பெரும்பாலும், கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதுமான செய்தி இரண்டாம் பட்ச நிலைக்குத் தள்ளப்படுகிறது. கிறிஸ்துவை பிரசங்கிக்க, பிரசங்கியார்களால் கொஞ்சம் தத்துவம், கொஞ்சம் நாட்டு நடப்பு, கொஞ்சம் அரசியல், மற்றும் சில சொட்டு பொழுதுபோக்குச் செய்தி ஆகியவைகளோடு துணைச் செய்தியாகப் பிரசங்கிக்கப் படுகிறது. ஆகிலும், புதிய ஏற்பாட்டுக்கு உண்மையாயிருக்க, “கிறிஸ்துவும் அவர் சிலுவையில் அறையப்பட்டதும்” ஆகிய செய்தி மிகவும் மையமாக - ஏதோ புற எல்லையில் வைக்கப் பட்டதாக இன்றி - சுவிசேஷத்தின் இருதயமாக இருக்க வேண்டும்!*

*“கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் அறையப்பட்டதையும்” பிரசங்கிப்பது என்பதன் பொருள் என்ன? இயேசுவின் வாழ்க்கை மற்றும் மரணம் ஆகியவைகளைப் பற்றிய வரலாற்றைச் சொல்வது, மற்றும் அதற்கும் அதிகமாகச் சொல்வது. கிறிஸ்துவுடன் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் பிரசங்கிப்பது. இந்த வகைப் பிரசங்கம் கர்த்தருடைய பந்தியையும், அதில் அவருடைய மரணத்தை நினைவு கூருதலையும் அவருடைய வருகை முன் அறிவிக்கப் படுகிறதான பாடங்களையும் உட்படுத்துவது. அது ஞானஸ்நானத்தையும், ஞானஸ்நானத்திலே நாம் கிறிஸ்துவுடன் இணைக்கப் படுகிறதுமான சாட்சியை வெளிப்படுத்துகிறது (ரோமர் 6:3, 4). அதிலே சபையைப் பற்றியும், அந்த சபையில் கிறிஸ்து அன்புகூர்ந்து தம் சொந்த இரத்தத்தால் வாங்கி அதற்காகவே மரித்தார் என்பதையும் உட்படுத்த வேண்டும் (நடபடிகள் 20:28). கிறிஸ்துவைப் பிரசங்கித்தல் என்பது அவர் என்ன போதித்தார், எப்படி வாழ்ந்தார் இந்த யுகம் முழுவதும் தமது சீஷர்களுக்கு தமது போதனையினாலும் தமது முன்னுதாரணத்தாலும் வழிநடத்த விரும்பினார் என்பதையும் உள்ளடக்கியது. கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் பிரசங்கித்தல் என்பதை சுருக்கமாகச் சொன்னால், முழு புதிய ஏற்பாட்டையும் பிரசங்கிப்பது, இந்த உடன்படிக்கைக்காகவே கிறிஸ்துவின் இரத்தம் பிரதிஷ்டை செய்யப்பட்டது (மத்தேயு 26:28).*

பின்வரும் போதனை ‘‘கிறிஸ்துவையும், அவர் சிலுவையில்

அறையப்பட்டதையும்” பிரசங்கிக்கிறது. இந்தப் பாடங்கள் இயேசுவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் சொல்லுகிறது, ஆகிலும் அவை அதோடு நின்று விடுவதில்லை. கூடுதலாக, அநேக வேத வசனங்களில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறப்படும் சத்தியங்களை முன்வைத்து, அவை இன்று நமது வாழ்க்கையில் அந்த சத்தியங்களை எப்படி பயன்படுத்தக் கூடும் என்பதையும் காட்டுகிறது.